## Packages:

| Category | Number of Barcodes | Registration Fee (One Time) | Annual Subscription |
|---|---|---|---|
| Category 1 | 100000 | Rs. 20,000/- | Rs. 17,000/- |
| Category 3 | 1000 | Rs. 5,000/- | Rs. 10,000/- |
| Category 4 | 1 | Rs. 2,500/- | - |
| Category 6 | 10 | Rs. 4,000/- | Rs. 6,000/- |


Contact us

**GS1 Lanka**

**The Ceylon Chamber of Commerce**

No. 50, Navam Mawatha, Colombo 02

T +94 (0)11 5588800

D +94 (0)11 5588885

info@gs1lanka.org

www.gs1lanka.org


GS1 Lanka



# GTIN

# GTIN [තීරු සංකේත] යනු මොනවාද?
# GTIN (பார்கோடு) என்றால் என்ன?
# What is a GTIN (Barcode)?

## பூகோள வியாபார பண்டக்குறி இலக்கம் - GTIN (பார்கோடு) என்றால் என்ன?

பூகோள வியாபார பண்டக்குறி இலக்கம் (பார்கோடு) என்பது இயந்திரத்தால் வாசிக்கப்படக்கூடிய குறியீட்டுகளை இலக்கங்களால் உள்ளடக்கியது. இதில் தொடரான கோடுகள் வறையறுக்கப்பட்ட இடைவெளியில் அச்சிடப்பட்டிருக்கும். இது லேசர் அல்லது கெமாராவினூடாக இரத்திரனியல் முறைமையில் வாசிப்பதாக அமைவதுடன் உள்வாங்கப்பட்டிருக்கும் பதிவுகளையும் விவரண தரவுகளையும் மற்றும் ஏனைய முக்கிய தகவல்களையும் தேடுவதற்கு உதவும் முறையாகும்.

## GTIN இனுடைய நன்மைகள் (பார்கோடு)

- **மனித தவறுகளை குறைப்பதற்கு:** பார்கோடு தொழிநுட்பத்தினை பயன்படுத்துகின்றபோது மனிதர்களால் ஏற்படும் தவறுகள் நிவர்த்திக்கப்பட்டு அதன் பெறுபேறாக கம்பனியின் வினைத்திறன் அதிகரிக்கும்.
- **ஒரு தானியங்கி பொருள் இருப்பு பட்டியல் கட்டுபாட்டு முறைமையினை கொண்டு நடாத்தும் திறன்:** பொருட்கள் பார்கோடுகளை உள்ளடக்கியிருப்பதால் மொத்தமாக பொருள் இருப்புக்களை கணனி மயப்படுத்த முடியும்.
- **நேரம் மற்றும் பணத்தினை சேமிப்பதற்கான வசதி:** பொருட்களுக்கு பார்கோடுகள் வழங்கப்பட்டிருப்பின், வேலைகளை குறைந்த தொழிலாளர்களை கொண்டு குறித்த காலத்தில் செய்து முடிக்கலாம் இது அதிக பணத்தினையும் நேரத்தினையும் சேமிக்க உதவும்.
- **செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரித்தல்:** பார்கோடுகள் விரைவாகவும் சரியாகவும் பதிவுகளை இணங்கண்டுகொள்ள உதவுவதால் வாடிக்கையாளர்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றலாம்.

## GS1 (குளோபல் ஸ்டான்டர்ட் ஒன்) என்றால் என்ன?

GS1 என்பது உள்;ர் மற்றும் சர்வதேச பங்குதாரர்களை வியாபாரத்தில் ஒருங்கிணைக்கும் சர்வதேச மொழியாகும். வியாபாரத்தின் முக்கிய பாகமான வியாபாரத்தினை அடையாளப்படுத்தல், தகவல்களை உள்வாங்கல் மற்றும் எனையவர்களுடன் பகிர்தல் அகியவற்றுக்கு GS1 உதவுகின்றது.

கம்பனிகளால் மேற்கொள்ளப்படும் வேறுப்பட்ட விநியோக சங்கலி செயற்பாடுகளில் ஏனையவற்றிலிருந்து தனித்துவத்துடன் விளங்க வைக்கின்றது, இத்தகைய வேறுபாடுகளால் அமைப்புகளுக்கிடையில் ஏற்படும் குழப்பங்களை தீர்க்க GS1 உதவுகின்றது. இன்று, விநியோக சங்கிலியில் உள்வாங்கபட்டிருக்கும் சில்லறை வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள், போக்குவரத்து சேவை வழங்குனர்கள் மற்றும் வைத்தியசாலைகள் ஆகியவற்றினை வலுவூட்டுவதில் பார்கோடுகள் பெரும் பங்காற்றுகின்றன. மேலும் குறைந்த செலவுடன் விநியோக சங்கிலியில் எல்லா நிலைகளிலும் உற்பத்திகளினை கண்டுபிடிப்பதற்கும் மற்றும் மாறுப்படும் நுகர்வோர் கேள்விகளை அறியவும் உதவுகின்றது.

## GS1 உடன் இணைவதன் முக்கியத்துவம்

- **உற்பத்தி சர்வதேச ரீதியாக இனங்காணல்:** ஒரு உற்பத்தியில் ஒரு நாட்டில் இடப்பட்ட பார்கோடுகள் தனித்துவமாக ஏனைய நாடுகளில் இனங்காணல். மேலும், உங்களது பொருட்கள் உலகில் எந்த பாகத்திலானாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- **உங்களது உற்பத்திகளுக்கு சர்வதேச தர உத்தரவாதம்:** உங்களது உற்பத்தியில் காணப்படும் GS1 இனது குறியீடுகள் குளோபல் ஸ்டான்டர்ட் முறைமை உள்வாங்கபட்டிருப்பதற்கு சான்றாகும்.
- **உங்களது உற்பத்தியினை சர்வதேச போட்டி உற்பத்தியாக உருவாகும்:** ஐக்கிய அமெரிக்க, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய பார்கோடுகள் முக்கியமானதாகும். இது ஏனைய ஏற்றுமாதியாளர்களுடன் ஒப்பிடுகையில் போட்டி நன்மையினை கொண்டிருக்கும்.

## GS1 லங்கா

GS1 லங்காவானது இலங்கையில் GS1 விநியோக சங்கிலி தர முறைமையினை செயற்படுத்த அதிகாரபெற்ற ஒரே நிறுவனமாகும். நாங்கள் சர்வதேச பார்கோடுகளை இலங்கை கம்பனிகளுக்காக வழங்குவதுடன் இலங்கை GS1 உற்பத்தி இலக்க வங்கியில் பேணுவதற்கும் உதவுகின்றோம். நாம் எப்போதும் எமது அங்கத்தவர்கள் சர்வதேச புளு1 தரமுறைமையினூடாக அதிகூடிய நன்மைகளை பெறுவதனை உறுதி செய்கின்றோம். இலங்கையில் ஏனைய நிறுவனங்கள் பார்கோடுகளை வழங்கல் அல்லது அவர்களின் பார்கோடுகளை பயன்படுத்துவது சட்ட விரோதமாகும் அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## எவ்வாறு பார்கோடுகளை பெற்றுக்கொள்வது

இலகுவான முறைமையினூடாக 30 நிமிடங்களுக்குள் உங்களது பார்கோடுகளை பெற்றுக்கொளள முடியும். விண்ணப்பபடிவத்தினை பெற்றுக்கொள்ள எம்மை தொடர்பு கொள்ளவும்.

## தேவைப்பாடுகள்:

1. ஒப்பந்தத்தில் கம்பனி சார்பாக கையெழுத்திட அதிகாரமுள்ள ஒருவர் வருகைதரல் (தனி சொத்துரிமை.'. உரித்தில் பங்குரிமை)
2. வியாபார பதிவு சான்றிதல் மூலப்பிரதி அல்லது உறுதிபடுத்தப்பட்ட சான்றிதலின் பிரதி (அத்தியவசியமானது)
3. பணிப்பாளருடைய விவரம் - படிவம் 1 அல்லது படிவம் 20 இன் முலப்பிரதி மறறும் ஒரு பிரதி (இறப்பர் முத்திரை அத்தியாசியமானதாகும்)
4. பட்டியல் உறுதி உதாரணம்: தொலைபேசி அல்லது மின்சார பட்டியல்
5. பணரீதியான செலுத்துகைகளுக்கு உடனடியாக இலக்கங்கள் வழங்கப்படும் அல்லது காசோலை "The Ceylon Chamber of Commerce" என எழுதப்பட வேண்டும், காசோலை கொடுப்பனவுகளுக்கு 4 அல்லது 5 தினங்களுக்கிடையில் இலக்கங்கள் வழங்கப்படும்.

## பொதிகள்

| வகை | பார்கோடுகளின் எண்ணிக்கை | பதிவு பட்டணம் (ஒரு தடவை) | வருடத்திற்கான தடவைக்கான கட்டணம் |
|---|---|---|---|
| வகை 1 | 100000 | ரூபா. 20,000/- | ரூபா. 17,000/- |
| வகை 3 | 1000 | ரூபா. 5,000/- | ரூபா. 10,000/- |
| வகை 4 | 1 | ரூபா. 2,500/- | - |
| வகை 6 | 10 | ரூபா. 4,000/- | ரூபா. 6,000/- |


எங்களைத் தொடர்பு கொள்ள

**GS1 லங்கா,**

**இலங்கை வர்த்தக சம்மேளனம்,**

இல.50, நவம் மாவத்தை, கொழும்பு 2.

T +94 (0)11 5588800

D +94 (0)11 5588885

info@gs1lanka.org

www.gs1lanka.org